வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 07.07.2025 திங்கட்கிழமை இதழ் : 187 பக்கங்கள் : 12

# சுண்டிக்குளத்தில் பொதுமக்களின் காணிகள் இரகசியமாக அளவீடு!

## கடற்படையினர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 07

**வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் ஜே/435 கிராம சேவகர் பிரிவில் மக்களின் காணிகள் இரகசியமான முறையில் கடற்படையால் அளவீடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண காணிக்கான மக்கள் உரிமை இயக்கத்தின் தலைவர் இ. முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியான ஜே/435 கிராம சேவகர் பிரிவில் அமைந்திருக்கின்ற மக்களின் மீன்பிடி நிலங்கள், மக்களுக்குரிய காணிகள் திருகோணமலையில் இருந்து வந்த கடற்படையின் ஒரு குழுவால் மிக இரகசியமாக அளவீடு செய்யப்பட்டுள்ளன.

தங்களுடைய சொந்த காணிகள் கடற் படையினரால் அளவீடு செய்யப்படுவதை அறிந்த அங்கு இருந்த ஒரு சில மக்கள் கடற்படையிடம் கேள்வி எழுப்பியபோது உங்களுடைய காணி என்றால் அனுமதிப் பத்திரத்தை காட்டுமாறு கோரினர் என மக்கள் கூறுகின்றனர்.

சுண்டிக்குள பகுதியில் காணப்படும் அதிகளவான காணிகள் அரச காணிகளாக

11

# வாகரையில் 3 சிறுவர்கள் குளத்தில் மூழ்கி மரணம்!

## மீன்பிடிக்கச் சென்றவேளை துயரம்

மட்டக்களப்பு, ஜூலை 07

மட்டக்களப்பு வாகரை கருவப்பன்சேனை குளத்தில் 3 சிறுமிகள் மூழ்கி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தனர் என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

உறவினர்களுடன் மீன் பிடிக்கச் சென்றவேளையிலே குறித்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பனிச்சங்கேணியைச் சேர்ந்த க.சானுஜன் (வயது-12) க.டிக்ஷன் (வயது-10), ஜெ.ருக்ஷனா (வயது-10) ஆகிய மூன்று மாணவர்களே

11

# சஜித் எமது தலைவர் அல்லர்!

## கூறுகிறார் மனோ கணேசன்



கொழும்பு, ஜூலை 07

"சஜித் பிரேமதாஸ எமது தலைவர் அல்லர். எமது அரசியல் எதிர்காலத்தை அவருக்கு எழுதி கொடுக்கவும் இல்லை." - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய

11

# அரியாலை மனிதப் புதைகுழியில் 47 எலும்புக்கூடுகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 07

அரியாலை மனிதப் புதைகுழியில் இரண்டாவது கட்டத்தின் 12ஆவது நாள் அகழ்வுப் பணி நேற்று நடைபெற்றது.

அதனடிப்படையில் நேற்று வரை 44 எலும்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டதுடன் இதுவரை 47 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப் படும் பகுதிக்கு அருகாமையில் ட்ரோன் மூலம் ஆய்வு



11

# ஓ.எல். பெறுபேறுகள் 15ஆம் திகதிக்கு முன்

கொழும்பு, ஜூலை 07

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப் படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற

11

# இனியபாரதி உள்ளிட்ட இருவர் விசாரணைக்காக கொழும்புக்கு!

கொழும்பு, ஜூலை 07

கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், சட்டவிரோத துப்பாக்கிப் பாவனை, கப்பம் பெற்றமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இனியபாரதி என்றழைக்கப்படும் கே.புஸ்பகுமார் உள்ளிட்ட இருவர் கொழும்புக்கு அழைத்து செல்லப்படுகின்றனர்.

இனிய பாரதி நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட நிலையில், அவரின்

11

# அமெ. வரி விதிப்பிலிருந்து இலங்கைக்கு நிவாரணம்!

## பிரதி அமைச்சர் சதுரங்க நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 07

அமெரிக்காவின் வரி விதிப்பின் நிவாரணத்தை பெற்றுக்கொள்ள கூடிய வாய்ப்பு இலங்கைக்கும் காணப்படுவதாக தொழில் முயற்சி அபிவிருத்தி

11

# அமெரிக்காவுடன் வரி இணக்க பேச்சு சாதகமான நிலையில்!

கொழும்பு, ஜூலை 07

இலங்கைமீது அமெரிக்கா விதித்த அதிக வரிகள் தொடர்பான பேச்சுகள் சாதகமான நிலையை எட்டியுள்ளன என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

11

# "27 வருடங்களாக அதே நிலையில் இலங்கையின் பொருளாதார தரம்"

கொழும்பு, ஜூலை 07

2025ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் உலக நாடுகளின் பொருளாதார தரவரிசையை உலக வங்கி வெளியிட்டுள்ளது.

அதன்படி, இலங்கை 27 வருடங்களாக தொடர்ந்து குறைந்த நடுத்தர வருமான நாடு

11

# 1.74 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நாணய நிதியம் இதுவரை வழங்கியது

கொழும்பு, ஜூலை 07

சர்வதேச நாணய நிதியம் இதுவரை நாட்டிற்கு 1.74 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது என அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கபில சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பான தற்போதைய நிலைமையை தெளிவுபடுத்துவதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கோரிய கடன் தொகை 9 தவணைகளில் பெறப்பட உள்ளது.

அவற்றில் 5 தவணைகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

மேலும், ஜூலை 3ஆம் திகதி 5ஆவது தவணையாக 350 மில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட்டுள்ளது- என்றார். (அ)

# வவுனியா வடக்கில் தமிழ் மக்களின் 600 ஏக்கர் காணி பறிபோகும் நிலை

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு



வவுனியா, ஜூலை 07

மகாவலி குடியேற்றத் திட்டத்தின் மூலம் வவுனியா வடக்கில் புதிதாக தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் 600 ஏக்கர் பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நடைமுறையில் உள்ள ஊழல் ஒழிப்பு சட்டம் மிகவும் முன்னேற்றகரமானது"

கொழும்பு, ஜூலை 07

2023 ஆண்டு 9 இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டம் என்பது இலங்கையில் ஊழல் ஒழிப்பு தொடர்பில் உள்ள முன்னேற்ற கரமான சட்ட மூலமாகும் எனவும் சர்வதேச சட்ட மூலத்தில் உள்ள விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின்பணிப்பாளர் நாயக முமான ரங்க திஸநாயக்க தெரிவித்தார்.

இலங்கை மன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சரவையானது மோசடி நோக்குடன் தீர்மானம் எடுத்து இருக்குமானால் அது சட்டவிரோதமானது.முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு எதிராக வழக்கு ஒன்றுள்ளது. மற்றொருவருக்கு எதிராக உர மோசடி தொடர்பிலும் வழக்கு உள்ளது. இவை அனைத்துக்கும் அமைச்சரவை பத்திரம் உள்ளது. தனிப்பட்ட வகையில் இவை அனைத்தையும் செய்யவில்லை என்பதற்கு அமைய இந்த குற்றங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இது தொடர்பில் எவ்வாறு செயற்படும் என அரச அதிகாரிகளிடத்தில் குழப்பம் ஏற்படலாம். அரச அதிகாரிகள் நேர்மையாக செய்யும் எந்த ஒரு விடயமும் இதில் உள்ளடங்காது. இது அமைச்சர் ஒருவர் கூறினதாலேயே அதனை செய்தேன் என ஒருவர் கூறினால் இந்த தவறுக்கு அவர்கள் பொறுப்பு கூறவேண்டிய தேவை கிடையாது.வாய்மொழி மூலமாகவே பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அதிகாரி ஒருவர் நேர்மையாக செய்யும் எந்த ஒரு விடயத்துக்கும் பொறுப்புக் கூறவேண்டிய தேவை இல்லை.

மேலும் 2023 ஆண்டும் 9 இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் என்பது இலங்கையில் ஊழல் ஒழிப்பு தொடர்பில் உள்ள முன்னேற்றகரமான சட்ட மூலமாகும். இந்த சட்ட மூலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோர் மற்றும் வேறு பல குற்றங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.அவர்களை விசாரணைக்கு உட்படுத்த படுத்துல், வழக்கு தாக்கல் செய்தல் தண்டனை வழங்குதல் மாத்திரம் உள்ளடக்கியது. இந்த சட்டமூலத்தில் சர்வதேச சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடுப்பு முறை கல்வி சுகாதாரம் நிறுவன வலுவூட்டல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் முறை என 4 பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன- என்றார். (அ)

# மருதங்கேணி விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 07

வடமராட்சி பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் வல்லிபுரம் ஆலயத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை விபத்தை ஏற்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் பட்டா ரக வாகனம், தப்பிச்சென்ற நிலையில் குறித்த வாகனத்தை கைப்பற்றும் நடவடிக்கையில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான குழுவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொன்னையா தேவராசா என்ற 64 வயதுடைய வல்லிபுர கோவிலடியை சேர்ந்தவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ)

# செம்மணி மனித புதைகுழி விவகாரத்தை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்க!

## தென்னிந்திய பிரபல நடிகர் சத்தியராஜ்

சென்னை, ஜூலை 07

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான விவகாரம் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சரியான நீதி கிடைக்க அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும் என தென்னிந்திய பிரபல நடிகர் சத்தியராஜ் வலியுறுத்தியுள்ளார்.

சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இருந்து பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருக்கின்றன. இதனைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாகவும், கோபமாகவும் அதிர்ச்சியை அளிக்கக்கூடிய வகையிலும் இருக்கிறது என்றும் தென்னிந்திய நடிகர் சு. சத்தியராஜ் தெரிவித்துள்ளார். (அ)

# சாவகச்சேரி நகரப் பகுதியை அழகுபடுத்தும் நகர சபையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 07

சாவகச்சேரி நகராட்சி மன்றின் நவீன சந்தைக் கட்டட மாடிப் படிக்கட்டு நுழைவாயில் பஸ் நிலையம் உட்பட சந்தைப் பகுதியின் வடிகான்கள் நகர சபையினரால் நேற்று சுத்தம் செய்யப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் புதிய சபை அமைக்கப்பட்டதன் பின்னர் நகரை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தில் முதற்கட்டமாக, நகர சபைத் தவிசாளர் சிறி பிரகாஷின் ஆலோசனைக்கமைவாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குணசாந்தனின் ஒழுங்குபடுத்தலில், உப தவிசாளர் ஞா.கிஷோரின் மேற்பார்வையில் குறித்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 'விஞ்ஞான வினாடி வினா புதிர்கள்' நூல் வெளியீடு

வவுனியா, ஜூலை 07

வடமராட்சி - பொலிகண்டியைச் சேர்ந்த வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர் சிவலிங்கம் சபேசனின் 'விஞ்ஞான வினாடி வினாப் புதிர்கள்' நூல் வெளியீடு அண்மையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பல்நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி குணரட்ணம் கமலகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூல் ஆய்வுரையை விரிவுரையாளர் எஸ்.சுகுமார் ஆற்றினார். நூலாசிரியரான சிவலிங்கம் சபேசன் ஏற்புரையை வழங்கினார். (ஐ)



# வவுனியா பள்ளிவாசல் அருகாமையில் முறையான அனுமதியின்றி புதிய கடை

வவுனியா, ஜூலை 07

வவுனியா பள்ளிவாசல் அருகாமையில் முறையான அனுமதியின்றி புதிய கடை ஒன்று, நிரந்தரமாக வீதியோரமாக அமைக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா மாநகர சபை இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா நகரின் பல பகுதிகளில் வீதியோர வியாபார நடவடிக்கைகளை வவுனியா மாநகர சபை அகற்றி வருகின்றது.

ஆனால், வீதியோரத்தில் பள்ளி வாசல் அருகாமையில் நிலையான கடை கட்டப்பட்டு வருகின்றது.

சனி, ஞாயிறு விடுமுறை தினத்தை பயன்படுத்தி கட்டப்படும் குறித்த கட்டுமான நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைத்துள்ளதாகவும் சிறு வியாபாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா மாநகர சபை ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள கவனம் செலுத்தவேண்டும் எனவும் சிறு வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சுகாதார சேவை என்பது சமூகத்துக்கான தேவை!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜூலை 07

சுகாதார சேவை என்பது வெறுமனே சேவை அல்ல என்றும் அது, சமூகத்திற்கான தேவை என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிக்கின்றார்.

நல்லாட்சியைப் போன்றே, சமூக தேவையையும் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் முக்கிய விடயம் என அவர் கூறியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற, இலங்கை மருத்துவ சங்கத்தின், நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் இதனைக் கூறினார்.

மருத்துவ கல்வியின் ஊடாக, மனிதாபிமான, உணர்வு பூர்வமிக்க, நெறிமுறை சார்ந்த முழுமையான மருத்துவர்களை உருவாக்குவது எவ்வாறு என்பது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு பிரதமர் இதன் போது கோரியுள்ளார்.

இதேவேளை, உலகளாவிய சுகாதார பாதுகாப்பு, டிஜிற்றல் மயமாக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை, மரபணு மருத்துவவியல் மற்றும் நாடுகளுக்கு இடையேயான மருத்துவ சேவையைப் பரிமாற்றத்தின்போது ஒழுங்கு படுத்தல்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ)

# எங்கள் நாட்டில் காணப்படும் குற்றச்சங்கிலி உடைக்கப்படும்

## தேசிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, ஜூலை 07

எம்முடைய நாட்டில் காணப்படும் குற்றச்சங்கிலியை உடைக்கும் விடயத்தையே தாம் முன்னெடுத்து வருவதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் நேற்று குப்பை கொட்டும் தளங்களை சுத்தப் படுத்தும் நடவடிக்கை இடம் பெற்றது. இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் தேசிய மக்கள் சக்தியினருக்கு உள்ளூராட்சி அதிகாரத்தை வழங்கியுள்ளனர். அந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் தமது வேலையை ஆரம்பித்துள்ளன. முதலில் மக்கள் இணைந்து அரசியல் குப்பைகளை அகற்றினர். இப்போது உண்மையில் உள்ளூராட்சி மன்றங்களில் பிரதேச வாசிகளையும் இணைத்துக்கொண்டு சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் மக்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றே கூற முடியும். தந்போது அனைத்து அதிகாரிகளும் அரசாங்கத்தின் கொள்கையை வெற்றிகரமாக நிறைவேற்ற தேவையாக அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குகின்றனர். அரசியல் குறைபாட்டின் காரணமாகவே அந்த நிறுவனங்கள் கடந்த காலங்களில் சீரழிவுக்கு உட்பட்டிருந்தன.

கிராமத்தை கட்டியெழுப்பு வேலைத்திட்டமாகவே பிரஜா சக்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களை கட்டியெழுப்புவது ஜனநாயகத்தின் ஒரு பகுதியாகும். பாதாளக் குழுக்களுக்கான அரசியல் பாதுகாப்பு தற்போது அற்றுப்போயுள்ளது. அதன் காரணமாக பாதாளக் குழுக்களுக்கு இடையில் தற்போது முரண்பாடுகள் தோன்றியுள்ளன. அந்த முரண்பாடுகளிக் தாக்கத்தையே சமூகத்தில் காண முடிகின்றது. ஆகவே, இதனை கட்டுப்படுத்தி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு எடுத்துள்ளது. அந்த வகையில் எந்த பிரச்னையும் இல்லை என்ற உறுதிப்பாட்டை வழங்க முடியும். எதிர்காலத்தில் எம்முடைய நாட்டில் காணப்படும் குற்றச்சங்கிலியை உடைக்கும் விடயத்தையே நாம் முன்னெடுத்து வருகின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஊ்ළනාඩු
07.07.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சர்வதேச தலையீடு - ஆதரவும் எதிர்ப்பும்

"இலங்கையில் சர்வதேச தலையீடு அவசியமற்றது" என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கிறார். இந்த நிலைப்பாடு புதியது அல்ல, முன்னைய ஆட்சியாளர்களும் கடைப்பிடித்த ஒன்றுதான். சர்வதேச தலையீடு என்பது உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர் அறிமுகமான ஒரு சொற் பிரயோகம் ஆகும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான முதலாவது பிரேரணை நிறைவேற்றப்பட்டதிலிருந்து இந்த விடயம் பிரபலமானது. ஒபாமா தலைமையிலான அமெரிக்க நிர்வாகமே இலங்கை மீதான சர்வதேச தலையீட்டுக்கான பிள்ளையார் சுழியை போட்டுவிட்டது.

அப்போது, அமெரிக்க இராஜாங்க செயலாராக இருந்த கிளாரி கிளின்ரன் இந்த விடயத்தில் பிரத்தியே அக்கறை எடுத்திருந்தார். புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களின் காரணமாகவே இவ்வாறானதொரு பிரேரணை கொண்டு வரப்பட்டதாகவே தென்னிலங்கை அரசியல் தரப்புகள் பிரசாரம் செய்தன. மகிந்த ராஜபக்ஷ மேற்குலகத்தின் தாளங்களுக்கு ஆட மறுத்ததன் காரணமாகவே இவ்வாறான அழுத்தங்களை அமெரிக்கா பிரயோகிப்பதாக ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினர். மறுபுறம், சர்வதேச அழுத்தம் என்பது ஈழத் தமிழர்களுக்கு சாதகமானது என்னும் பார்வையே தமிழர் தரப்புகளால் முன் வைக்கப்பட்டன. அந்த அடிப்படையிலேயே அரசியலும் நகர்த்தப்பட்டது.

உண்மையில், அமெரிக்காவின் அன்றைய மனித உரிமைகள்சார் தலையீடுகளுக்கும் அப்போதைய ஆசியா தொடர்பான அவர்களுடைய கொள்கை நிலைப்பாட்டுக்கும் இடையில் தொடர்புண்டு. அப்போது ஒபாமா நிர்வாகம் ஆசிய மையக் கொள்கையை முதன்மைப்படுத்தியது. அமெரிக்காவின் தலைமைத் துவத்திற்காக ஆசியா ஏங்கிக் கொண்டிருப்பதாக கிளாரி கிளின்ரன் 'பசுபிக் நூற்றாண்டு' என்னும் தலைப்பிலான உரையில் குறிப்பிட்டிருந்தார். இதன் தொடர்ச்சியாகவே இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பான விடயம் அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப்பட்டது. ஆனால், இந்த விடயங்கள் தமிழ்ச் சூழலில் உற்று நோக்கப்படவில்லை. தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் சர்வதேச அரசியலை புரிந்து கொண்டு அதற்கேற்ப சிந்திக்கவும் எதிர்வினையாற்றவும் கூடிய தலைவர்கள் இல்லைமையும் இதற்கு ஒரு காரணமாகும்.

புலம்பெயர் அமைப்புகளை பொறுத்தவரையில் தங்களின் லொபியின் விளைவாகவே இவ்வாறான பிரேரணைகள் தொடர்வதான பிரசாரத்தையே முன்னெடுத்தன. ஒவ்வொரு மார்ச் மாதமும் ஜெனிவா செல்வதை ஒரு சாதனையாகவே காண்பித்துக் கொண்டன. யார் ஜெனிவாவில் கூட்டங்கள் நடத்தினார்கள்? அதில், சரியாக விடயங்களை கூறியவர்கள் யார் என்னும் வகையில் தமிழ் தரப்புகள் மக்கள் மத்தியில் போட்டிகளும் இடம்பெற்றன.

ஆனால், தென்னிலங்கை ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். அதாவது, நாங்கள் சர்வதேச தலையீடுகளை ஏற்றுக்கொள்ள மாட்டோம். இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு, இலங்கையின் சட்டங்களின் அடிப்படையில்தான் விடயங்களை கையாளுவோம். இந்த விடயத்தில் ராஜபக்ஷக்கள் பயன்படுத்திய எதிர்வினைக்கும் பின்னர், ரணில் காண்பித்த எதிர்வினைகளுக்கும் இடையில் சில வித்தியாசங்கள் இருந்தன. ஆனால், சர்வதேச தலையீடுகளை அனுமதிக்க முடியாது என்பதில் வேறுபாடுகள் இருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச தலையீடுகள் தேவையில்லை என்று கூறுவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அதிலும், குறிப்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒப்பீட்டடிப்படையில் முன்னைய ஆட்சியாளர்களை விடவும், பாதுகாப்பான நிலையில் இருக்கிறது. ஏனெனில், யுத்தத்தோடு அவர்களுக்கு தொடர்பில்லை. யுத்தததுக்கு ஆட்சேர்ப்பு செய்தார்கள், ராஜபக்ஷவுக்கு முண்டு கொடுத்தார்கள் என்பதெல்லாம் வடக்கு, கிழக்கில் வாக்குகளை பெறுவதற்கான சுலோகமாக பயன்படுத்தலாமே தவிர, இராஜதந்திர உலகத்துக்கு முன்னால் இதெல்லாம் ஒரு விடயமல்ல.

சர்வதேச தலையீடுகள் என்பது நிறைவான ஒன்றல்ல. ஏனெனில், சர்வதேசம் என்பது ஒன்றல்ல - அது பல வகையானது. பல நாடுகள் தங்களின் நலன்களுக்காக தலையீடுகளை செய்யும் நிலையில் சர்வதேச சமூகம் என்று ஒன்றில்லை. இந்த அடிப்படையில் சர்வதேச அழுத்தம் என்பது அடிப்படையில் மேற்குலக அழுத்தங்கள்தான். ஆனால், மேற்குலக அழுத்தங்களும் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது. இவை அரசுகளுக்கே அதிகம் சாதகமாக இருக்கின்றன.

## 3517 ஆசிரியர்களுக்கு வடக்கில் பற்றாக்குறை

வவுனியா, ஜூலை 07

வடக்கு மாகாணத்தில் 3517 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாணத்தில் 3517 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ளது. அரசாங்கத்தின் சுற்று நிருபம் மூலம் பட்டதாரி ஆசிரியர்களை உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த சுற்று நிருபத்தில் பல பிழைகள் உள்ளன. அதில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. அதனால் பட்டதாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அந்த சுற்று நிருபம் நிறுத்தப்பட்டுள்ளது. புதிய சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது. புதிய சுற்று நிருபத்தில் 1756 ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். பற்றாக்குறையில் 50 வீதம் உள்வாங்கப்படவுள்ளார்கள். இதன் மூலம் கணிசமான ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க முடியும். ஆனாலும் அதில் ஒரு தடையுள்ளது. ஏற்கனவே வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கையும் விரைவாக முடித்து இந்த வருடத்துக்குள் ஆசிரிய நியமனத்தை வழங்க எண்ணியுள்ளோம். பொதுவான வெட்டுப் புள்ளியை நிறுத்தி மாவட்டத்துக்குத் தனித் தனியான வெட்டுப் புள்ளிகளை வழங்கி மாவட்டத்துக்குத் தேவையான ஆசிரியர்களை உள்வாங்குவதன் மூலம் இடமாற்றப் பிரச்னையையும் தீர்க்க முடியும். இது தொடர்பில் ஆளுநருடன் பேசியுள்ளோம்"- என்றார். (எ-10)

## இளைஞன் கடத்தி படுகொலை பல கோணங்களில் விசாரணை

கொழும்பு, ஜூலை 07

இரத்தினபுரியில் இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

4 பேர் கொண்ட குழு ஒன்று வீட்டில் இருந்த இரண்டு இளைஞர்களை கடத்திச் சென்றதாகவும், பின்னர் அவர்களை பாழடைந்த பகுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்று துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இதில், 22 வயது இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்த இளைஞரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்ற நிலையில், அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதன்போது, நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் முயற்சித்தபோது, கிராமவாசிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இந்த படுகொலை தொடர்பாக டுபாயில் உள்ள அமில என்ற நபருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ள நிலையில், அவரது வீட்டுக்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (எ)

## பொரளை துப்பாக்கிச்சூடு மேலும் இருவர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 07

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்கஹகும்புற பகுதியில் நபர் ஒருவரை ரி - 56 வகை துப்பாக்கியால் சுட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மற்றும் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகள் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் 04 ஆம் திகதி இடம்பெற்றிருந்த நிலையில், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், இந்த குற்றச்செயலுக்கு உதவி புரிந்ததாக சந்தேகிக்கப்படும் இருவர், நேற்று முன்தினம் இரவு பொரளை சிரிசர உயன மற்றும் வெல்லம்பிட்டிய சேதவத்த பகுதிகளில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 18, 19 வயதுடைய சந்தேகநபர்கள், பொரளை, வெல்லம்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குற்றச்செயல் தொடர்பாக இதுவரை ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)


## பாதாள குழுவை சேர்ந்தவர் சிறையில் மரணம்

கண்டி, ஜூலை 07

பூஸா அதி உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் போதைப்பொருள் கடத்தல் காரருமான "தெவுந்தர குடு சமில்" என்று அழைக்கப்படும் நாராதொட்ட ஹேவகே சமில் அஜித் குமார என்பவர் உயிரிழந்தார்.

தெவுந்தர குடு சமில் என்பவர் சுகவீனம் காரணமாக காலி கராப்பிட்டி மருத்துவமனையில் நீண்ட நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள்.

**இடபம்**

மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுனம்**

விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்**

நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள்.

**சிம்மம்**

பயணங்களால் அலைச் சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**கன்னி**

குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கி இருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய பிரச்னைகள் தீரும்.

**விருச்சிகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். யாருக்கும் பணம் நகைவாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**தனுசு**

விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம்.

**மகரம்**

பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். அசதி சோர்வுவந்து விலகும். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள்.

**கும்பம்**

உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும்.நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும்.கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

# அறுகுவெளியில் மீண்டும் உப்பளம் நிலத்தடி நீர் வளத்துக்கு ஆபத்து!

யாழ்ப்பாணம், ஜூலை 07

தென்மராட்சியின் சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட தனங்கிளப்பு அறுகுவெளி பகுதியில் மீண்டும் உப்பளம் அமைக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில வரு டங்களுக்கு முன்னர் ஆரம்பிக் கப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலிருந்த உப்பளமே மீண்டும் திடீரென இயங்கு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த உப்பளத்தால் சட்டவிரோத செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அறிந்த சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் செ. மயூரன், சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் ஞா. கிஷோருடன் உப்பளத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

இதன்போது ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் உப்பு உற்பத்தி பாத்திகளுக்கு நீர் இறப்பதனை கண்டுபிடித்தனர்.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சுமார் 5 குழாய் கிணறுகளில் நீர் எடுக்கப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு உப்பளம் அமைப்பதற்கு சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியும் பெறப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

அறுகுவெளி கடல் நீரேரியில் இருந்தே உப்பு உற்பத்திக்கான நீர் எடுக்க வேண்டிய நிலையில் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யாமல் சட்டவிரோத குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் தென்மராட்சியின் நிலத்தடி நீர் வளம் பாதிக்கக்கூடிய அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளதால் உரிய அதிகாரிகள் இதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு உப தவிசாளர் கிஷோர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் மயூரன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(எ-05)

# வட மாகாணத்தில் 1756 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

வவுனியா, ஜூலை 07

புதிய சுற்று நிருபத்தில் 1756 பட்டதாரி ஆசிரியர்கள் வடக்கு மாணத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். அவர்களுக்கான போட்டிப் பரீட்சையின் போது மாவட்ட ரீதியில் தேவைக்கு ஏற்ப வெட்டுப் புள்ளிகளை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த வாரம் உலக வங்கி பிரதிநிதிகளுடன் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எங்களது அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக ஒரு பில்லியன் டொலர் நிதி உதவி வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு ஒதுக்கப்படவுள்ளது. அந்தவகையில் இதனூடாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கும் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது, கிராமிய பொருளாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல், வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் போன்ற செயல்பாடுகளை செய்ய இருக்கின்றோம்.

அதுமட்டுமல்லாது வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நீண்டகாலமாக குளங்கள், புனரமைக்கப்படாமலும், தூர் வாராமலும், பழுதடைந்தும் காணப்படுகின்றன. இவற்றைத் திருத்தியமைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. விசேடமாக இந்த நிதியத்தின் மூலம் இதை செய்து தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. விவசாயத்திலும் நெற்பயிர்ச்செய்கை பிரதான இடத்தை பெறுகின்றது. சிறுபோக நெற் செய்கைக்கு மக்கள் அவதிப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளும் நிலத்தின் அளவு குறைவாகவுள்ளது. இதற்கு குளத்து நீர் போதாமை காரணமாகும். எனவே, குளங்களைப் புனரமைப்பு செய்வதன் மூலம் சிறுபோக நெற் செய்கையை அதிகரிக்க முடியும். விவசாயிகள் பொருளாதாரத்தில் மட்டுமன்றி எமது பிரதேச அரிசி தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். கிராமிய வீதிகளையும் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்”- என்றார்.

(எ-10)

# “வட மாகாணத்தின் கல்வித்துறை இடமாற்றங்கள் பூதாகர பிரச்னை”

வவுனியா, ஜூலை 07

“வடக்கு மாகாணத்தின் கல்வித்துறையில் இடம்பெறும் இடமாற்றங்கள் பூதாகரப் பிரச்னையாகவுள்ளன”- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடமாகாணத்தில் இடம்பெற்ற வலயங்களுக்கு இடையிலான இடமாற்றத்தில் மடு, வவுனியா வடக்கு, மன்னார், துணுக்காய் போன்ற வலயங்களில் இருந்து செல்ல வேண்டிய ஆசிரியர்களில் 99 வீதமானவர்கள் இடமாற்றத்தை ஏற்று விடுவிக்கப்பட்டுள்ளார்கள். இதே வேளை, அந்த வலயங்களுக்கு வரவேண்டிய ஆசிரியர்கள் முழுமையாக வருகை தரவில்லை. மடு வலயத்தில் 29 ஆசிரியர்கள் வேறு வலயங்களுக்கு இடமாற்றமாகி சென்றுள்ளார்கள். 4 ஆசிரியர்கள் மட்டுமே வந்துள்ளார்கள். இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறிய நிலையில் உள்ள மாணவர்களின் கல்வி மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது மாகாண கல்வித் திணைக்களம் கரிசனையோடு கவனம் செலுத்தி மேற்கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாது இடமாற்றம் சிலவற்றில் பிழைகள் உள்ளன. தெரிவுகளில் தவறுகள் உள்ளன.

எதிர்வரும் காலத்தில் துல்லியமான தகவல்களைப் பெற்று ஆசிரியர்களுக்கு அநீதி இடம்பெறாத வகையில் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்”- என்றார்.

(எ-10)

# ஏகம்பைக்குளத்தை விடுவிக்க வேண்டும்

முல்லைத்தீவு, ஜூலை 07

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையப் பிரிவிலுள்ள ஏகம்பைக்குளத்தையும் பிராமண குளத்தையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

குறித்த குளங்கள் இரண்டும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்தநிலையில், தற்போது அப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி வருகின்றனர். இத்தகையசூழலில் குறித்த பகுதியை வனவளத்திணைக்களத்தினர் ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த நிலையிலேயே குறித்த குளங்களை விடுவிப்புச்செய்து மக்களின் விவசாய பயன்பாட்டுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ரவிகரன் எம். பி. வலியுறுத்தியுள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஜூலை 07

ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து தலைமையகத்தைச் சேர்ந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளே கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் 590 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டார்.

ஜெயவர்தனபுர சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் மாளிகாவத்தையில் உள்ள ஒரு வீட்டை சோதனை செய்த போது சந்தேகநபரை கைது செய்தனர். (ஐ)

# கடும் காற்றால் வீதியில் சாய்ந்தது பெரும் மரம்!

## போக்குவரத்தும் பாதிப்பு



ஹற்றன், ஜூலை 07

மலையக பகுதிகளில் வீசி வரும் பலத்த காற்றால் ஹற்றன்-மஸ்லியா பிரதான வீதியில் மரம் ஒன்று விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் நிவ்வெளி பகுதியில் உள்ள பிரதான வீதியில் நேற்று மரம் ஒன்று விழுந்தது. விழுந்த மரத்தை அந்தப் பகுதியை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பொலிஸ் அதிகாரிகளுடன் சேர்ந்து மரத்தை அகற்றும் பணியில் ஈடுப்பட்டனர்.

மரம் விழுந்த பகுதியில் மேலும் பல மரங்கள் விழும் அபாயம் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொழும்பு துப்பாக்கிச்சூடு: விசாரணைக்கு 3 குழுக்கள்!

கொழும்பு, ஜூலை 07

கொழும்பு - அவிசாவளையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் விசாரிக்க 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 12 வயது சிறுமி உள்ளிட்ட மூவர் காயமடைந்தனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந்தெரியாத இருவரால் முச்சக் கர வண்டியில் பயணித்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டுள்ளது.

இசைக் கச்சேரியை பார்த்துவிட்டு வீடு திரும்பும் போதே மூவரும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மதவாச்சியில் வங்கிக்குள் புகுந்தது காட்டு யானை

கொழும்பு, ஜூலை 07

காட்டு யானை ஒன்று அநுராதபுரம் - மதவாச்சி மக்கள் வங்கிக்குள் புகுந்து சேதம் ஏற்படுத்தியுள்ளது.

மதவாச்சி நகருக்கு வந்த யானை, மன்னார் சாலையில் மதவாச்சி பேருந்து நிலையம் முன்பாக அமைந்துள்ள மக்கள் வங்கிக்குள் புகுந்து வங்கியின் நுழைவாயிலான கண்ணாடி கதவை உடைத்து வங்கிக்குள் நுழைந்தது. அத்துடன், வங்கியின்கூரையையும்சேதப்படுத்தியது.

இதன்பின்னர், அருகிலிருந்த கோயிலுக்குள் நுழைந்து அங்கிருந்த பழங்களை உண்டதுடன், கோயில் தோட்டத்துக்குள்ளும் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# புதிய அரசமைப்பை உருவாக்கும் இயலுமை அரசிடம் கிடையாது!

## முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, ஜூலை 07

**வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் பல சட்டமூலங்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தோம். இந்த சட்டமூலங்களைக்கூட இயற்ற முடியாத அரசாங்கம் எவ்வாறு புதிய அரசமைப்பை உருவாக்க போகிறது. புதிய அரச மைப்பை உருவாக்கும் இயலுமை இந்த அரசாங்கத்துக்கு கிடையாது என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார்.**

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையடைந்த நாட்டைத்தான் நாங்கள் பொறுப்பேற்றோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கைக்கும் எனக்கும் இடையில் மாறுப்பட்ட தன்மை காணப்பட்டது. இருப்பினும், நாடு வங்குரோத்து நிலையடைந்த சந்தர்ப்பத்தில்தான் அவர் தனிமனிதனாக சவால்களை எதிர்கொண்டார். அவருக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம்.

பொருளாதார மீட்சிக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த கடுமையான தீர்மானங்களால்தான் நிதி வங்குரோத்து நிலையில் இருந்து நாடு குறுகிய காலத்துக்குள் மீட்சிப்பெற்றது. பொருளாதார காரணிகளை கருத்தில் கொள்ளாமல்தான் நாட்டு மக்கள் 2024 ஆம் ஆண்டு அரசியல் ரீதியிலான தீர்மானத்தை எடுத்தார்கள்.

மக்களின் எதிர்பார்ப்பு தற்போது நிறைவேறியுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. நாட்டில் அரசியல், பொருளாதாரம் ஆகிய இரண்டும் ஒன்றிணைந்துள்ளதால் ஆட்சியியல் கட்டமைப்பில் முரண்பாடான தன்மை காணப்படுகிறது.

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டாண்டு காலத்தில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம். யுத்த காலத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இன்றும் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

தென்னாபிரிக்க மாதிரியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு வெளிப்படையான நடவடிக்கைகளை முன்வைத்து சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தோம். இந்த சட்டமூலத்துக்கு வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். தமிழ் மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு ஏதேனும் வகையில் கட்டம் கட்டமாக தீர்வு காணும் நோக்கம் தமிழ் பிரதிநிதிகளிடம் கிடையாது என்பதை வெளிப்படையாக குறிப்பிட முடியும். தீர்வு கோருகிறார்கள். ஆனால், முன்வைக்கும் அனைத்து திட்டங்களுக்கும் எதிர்ப்பை மாத்திரமே வெளியிடுகிறார்கள். முழுமையான தீர்வு காலம் காலமாக கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் கிடைக்கும் பகுதியளவிலான தீர்வுகளையும் அவர்கள் ஏற்கவில்லை.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கும், அரசமைப்பு திருத்தத்துக்கும் இடையில்பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் அதற்கான பணிகள் விரிவாக ஆராயப்பட வேண்டும். அதற்கு நீண்ட காலம் தேவைப்படும். இந்த அரசாங்கம் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காது என்பது தெளிவாகத் தோன்றுகிறது. ஆரம்பக்கட்ட பணிகளை தற்போது ஆரம்பித்தால் இரண்டு ஆண்டுக்குள் யாப்பை உருவாக்க முடியும் - என்றார். (ஐ)

# விபசாரத்தில் ஈடுபட்ட பெண்கள் கைது

கண்டி, ஜூலை 07

ஆயுள்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபசார நிலையம் சுற்றிவளைக்கப்பட்டு, 5 பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

கண்டி - கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# விபத்தில் மூதாட்டி பலி!

கொழும்பு, ஜூலை 07

தனியார் பேருந்து முச்சக்கர வண்டியை மோதிய விபத்தில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

கேகாலை - எட்டியாந்தோட டையில் ஹற்றன் - கொழும்பு வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தனியார் பேருந்து முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர்த் திசையில் வந்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்கு உள்ளானது. இதில், 84 வயது பெண்ணே உயிரிழந்தார்.

பேருந்தின் சாரதியை எட்டியாந்தோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# மாபெரும் சீர்திருத்தங்களை நாம் முன்னெடுத்து வருகிறோம்

## அரசாங்கம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 07

அரசாங்கத்தின் கொள்கையான "வளமான நாடு - அழகான வாழ்க்கை" மூலம் மறுமலர்ச்சி யுகத்தை நோக்கி நாட்டை வழிநடத்துவதற்காக மாபெரும் சீர்திருத்தங்கள் இந்த காலகட்டத்தில் நடைபெற்று கொண்டிருக்கின்றன என்று தொழில் கல்வி பிரதியமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசின் கொள்கையான வளமான நாடு அழகான வாழ்க்கை மூலம் மறும்லர்ச்சி யுகத்தை நோக்கி நாட்டை வழிநடத்துவதற்காக மாபெரும் சீர்திருத்தங்கள் இந்தக் காலகட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த மாற்றத்தை நாட்டில் ஏற்படுத்த முதலில் இந்த இடங்கள் புதுப்பித்தல் நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு உள்ளாக வேண்டும். இளைஞர்கள், யுவதிகளின் மனப்பான்மைகளில் மேம்பாடு ஏற்பட வேண்டும்.

தற்போதைய இளைஞர், யுவதிகள் தொழில்நுட்பத்துடன் முன்னால் வந்துள்ளனர். இருப்பினும், நிறுவனக் கட்டமைப்பானது பல மைல்களுக்குப் பின்னாலேயே இருந்து வருகின்றன. ஆகையால் நாம் இந்த நவீன இளைஞர்களுக்கு ஏற்ற நிறுவன சூழலை முதலில் உருவாக்க வேண்டும். அதனாலேயே இன்று இலங்கையில் 311 நிறுவனங்களில் பெரும் உழைப்பு நடவடிக்கை திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஒரு இலட்சத்து 60 ஆயிரத்துக்குக்கும் மேற்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து நாடு முழுவதிலும் தங்கள் நிறுவன அமைப்பை உருவாக்கும் பணியை ஆரம்பித்திருக்கின்றனர். இது இங்கேயே நின்றுவிடப் போவதில்லை. இந்தத் துறையின் மூலம் நாட்டில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பது இன்றியமையாதது

## நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார



கொழும்பு, ஜூலை 07

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் கடும் துன்பத்துக்கு முகங்கொடுத்து வருகிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்வதும் அவர்களுக்குரிய நீதியை வழங்குவதும் அவர்களுக்கான பொருளாதார, சமூக ரீதியான உதவிகளை பெற்றுக் கொடுப்பதும் இன்றியமையாததாகும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**


சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஏற்பாட்டில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான முதலாவது தேசிய மாநாடு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்றது. அதன் நீட்சியாக இரண்டாவது தேசிய மாநாடு கடந்த ஜுன் 25 - 27 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது.

இதில், பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் கடும் துன்பத்துக்கு முகங்கொடுத்து வருகிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்வதும் அவர்களுக்குரிய நீதியை வழங்குவதும் அவர்களுக்கான பொருளாதார, சமூக ரீதியான உதவிகளை பெற்றுக்கொடுப்பதும் இன்றியமையாததாகும்.

மேலும், இலங்கையிலுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தேவைகள், எதிர்பார்ப்புகள் தொடர்பில் செஞ்சிலுவை சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையின் பிரதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயல்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ)

ஜனாதிபதியை சந்திக்க அனுமதி கோரி

# வீதி சமிக்ஞை கம்பத்தின் மீதேறிய இளைஞர் கைது!



கொழும்பு, ஜூலை 07

ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனுமதி கோரி ஜனாதிபதி செயலகம் முன்பாக வீதி சமிக்ஞை கம்பத்தின் மீதேறி போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்ட நபர் வெலிகந்தையை சேர்ந்த 23 வயது இளைஞராவார்.

ஜனாதிபதி செயலகம் முன்பாக 20 அடி உயர வீதி சமிக்ஞை கம்பத்தின் மீதேறிய இளைஞர், ஜனாதிபதிக்காக காத்திருந்தார். இதைத் தொடர்ந்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு வந்த பொலிஸார் அவரை கீழே இறங்க அறிவுறுத்தினர். ஆனால், அவர் மறுத்துவிட்டார்.

இந்த சம்பவத்தால் காலி முகத்திடல் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதையடுத்து, தீயணைப்பு இயந்திரம் வரவழைக்கப்பட்டு வீதி சமிக்ஞை கம்பத்திலிருந்த நபர் பாதுகாப்பாக இறக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து பொலிஸார் அவரை கைது செய்தனர்.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 07

உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குருநாகல் - அலவ்வ பொலிஸ் பிரிவிலேயே சந்தே கநபர் கைது செய்யப்பட்டுள் ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமை வா கவே சந்தேகநபர் கைது செய் யப்பட்டார். கைதா னவர் பல்லேமொருகம பகுதியை சேர்ந்த 40 வயதுடை யவராவார்.

மேலதிக விசாரணைகளை அலவ்வ பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொரளையில் இன்று விசேட போக்குவரத்து


கொழும்பு, ஜூலை 07

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் குருத்துவ வாழ்வின் 50ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று திங்கட்கி ழமை விழா நடைபெறவுள்ளது. இதனால், இன்று மாலை பொரளை பகுதியில் விசேட போக்குவரத்து திட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொரளையிலுள்ள கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெறும் விழாவில் மதப் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், மதகுருமார்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிலையில், போக்குவரத்து நெரிசலை குறைக்க இன்று பிற்பகல் 3.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொரளை பொலிஸ் பிரிவுக்குள் உள்ள கின்சி வீதி, ஹோர்ட் பிளேஸ் முதல் நந்ததாச கோட கொட சந்தி வரை யிலான பகு தியில் கனரக வாகனங்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. வாகன ஓட்டிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்து மாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

# மதுபானம், ஏலக்காயுடன் நான்கு பேர் கைதாகினர்



கொழும்பு, ஜூலை 07

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட மதுபான போத்தல்கள், ஏலக்காய் பொதிகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரும் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு, ஹற்றன் பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்கள் இந்தியாவின் பெங்களூாரிலிருந்து விமானத்தில் வருகை தந்தனர்.

இதன்போது, வரி அறவிடப்படாத ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 378 விஸ்கி போத்தல்கள், 132 கிலோ ஏலக்காய் என்பன அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. (ஐ)

# கீரி சம்பாவுக்கு இணையான அரிசி இறக்குமதியாகவுள்ளது

## அமைச்சர் வசந்த சமரசிங்க



கொழும்பு, ஜூலை 07

நாட்டின் மாபியாக்களை ஒழிக்கும் வகையில் இந்தியாவிலிருந்து கீரி சம்பா அரிசியை ஒத்த ஜீ. ஆர். ரக அரிசியை இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக, வர்த்தக, வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி ஒரு கிலோ 250 ரூபாய்க்கும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும். இந்தியாவிலிருந்து 40ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சிறுபோக அறுவடையின் பின்னர் நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. எனினும், சீரற்ற வானிலை மற்றும் ஏனைய காரணங்களால் அவை தடைப்படுமிடத்து, அரிசி இறக்குமதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# ரூ. 5 ஆயிரம் லஞ்சம் பெற முயன்ற கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஜூலை 07

பெண் ஒருவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போக்குவரத்து பிரிவில் பணியாற்றும் கைதான பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத பெண் ஒருவரிடம் 5 ஆயிரம் ரூபாயை லஞ்சமாக பெற முனைந்தபோதே கறுவாத் தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார். இதேநேரம், கைது செய்யப்பட்ட வேளை சந்தேகநபர் போதைப்பொருளை பயன்படுத்தியிருந்தமை தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து சந்தேகநபரை பணியிலிருந்து இடைநீக்கம் செய்ய கொழும்பு தெற்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி. ஆர். சமன் ஜெயலத் நடவடிக்கை எடுத்துள்ளார். (ஐ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# பாராளுமன்றில் எதிர்ப்புக்கு தயாராகின்றது எதிர்க்கட்சி!

கொழும்பு, ஜூலை 07

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்துவதில் அரசாங்கம் தொடர்ந்தும் பின்னடைவுகளை சந்தித்து வருவதாக குற்றஞ்சுமத்தியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த வாரம் இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வின்போது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த திட்டமிட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளன. புதன்கிழமை உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் தொடர்பான ஒத்தி வைப்பு விவாதம் நடைபெறவுள்ளது. இந்த விவாதம் இதற்கு முன்னரும் இரண்டு நாட்கள் நடத்தப்பட்ட போதிலும், பயங்கரவாத தாக்குதல்களின் மூளையாக செயல்பட்ட சூத்திரதாரிகள் குறித்து எந்த வெளிப்பாடுகளையும் அரசாங்கம் கூறவில்லை.

எனவே, புதன்கிழமை நடைபெறவுள்ள சிறப்பு விவாதத்தின்போது, உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல்களின் சூத்திரதாரிகளை வெளிப்படுத்துமாறு அரசாங்கத்தின் மீது கடும் அழுத்தத்தைப் பிரயோகிக்க எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னும் பின்னும் உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல்களின் சூத்திரதாரிகளை நாட்டுக்கு அம்பலப்படுத்துவோம் என்று அநுர குமார திஸநாயக்கவும் அவரது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் உறுதியளித்திருந்தனர். ஆட்சிக்கு வந்த பின்னரும்கூட பல சந்தர்ப்பங்களில் பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்துவதாக அரசாங்கம் கூறியது. ஆனால், இன்றுவரை பிரதான சூத்திரதாரி யார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை. இந்த நிலையிலேயே எதிர்க்கட்சி எதிர்ப்புக்கு தயாராகி வருகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு:
# 12 வயது சிறுமி உட்பட மூன்று பேர் படுகாயம்!

கொழும்பு, ஜூலை 07

**கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 12 வயது சிறுமி உட்பட மூவர் காயமடைந்தனர்.**

கொழும்பு - அவிசாவளை - கொஸ்கம -சுதுவெல்ல பகுதியில் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இனந்தெரியாத நபர்கள் குறித்த துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதில், முச்சக்கர வண்டியில் பயணித்த தாய் (30), மகள் (12), மற்றொரு நபர் (44) காயமடைந்த நிலையில் அவிசாவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்றும் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபர்கள் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில், கொஸ்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## “ஏற்றுமதித்துறை சிக்கல்களால் பொருளாதார வளர்ச்சி பாதிப்பு”

கொழும்பு, ஜூலை 07

2028ஆம் ஆண்டுக்கு வெளிநாட்டு கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் ஏற்றுமதித் துறையில் எதிர் நோக்கும் சிக்கல்கள் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரிக் கொள்கைகள் இலங்கையின் ஏற்றுமதிக்கு போட்டியை ஏற்படுத்தியுள்ளன. பிற நாடுகள் அமெரிக்காவுடன் இணக்கப்பாடுகளை எட்டினாலும் அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

தற்போதைய அரசாங்கம், முன்னைய அரசாங்கம் மேற்கொண்ட சர்வதேச நாணய நிதிய உடன்பாட்டைத் திருத்தாமல் தொடர்கிறது.

5 சதவீதம் வளர்ச்சி விகிதம் தேவைப்பட்டாலும், தற்போதைய வளர்ச்சி 3.1 முதல் 3.5 சதவீதமாக மட்டுமே உள்ளது. மக்கள் கடனாளிகளாக மாறி, சொத்துகளை அடமானம் வைக்கிறார்கள். காணி மற்றும் வீட்டுப் பிரச்னைகளும் தீர்க்கப்படவில்லை.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்து மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கும் - என்று கலாவெவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

## 185 பாடசாலைகளில் நுளம்பு பெருகும் சூழல்

கொழும்பு, ஜூலை 07

நாட்டில் உள்ள 185 பாடசாலைகளிலும் 221 அரச நிறுவனங்களிலும் நுளம்பு பெருக்கத்துக்கு உகந்த சுற்றுச்சூழல் அவதானிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றில், 35 பாடசாலைகள் மற்றும் 41 நிறுவனங்களில் டெங்கு நுளம்பு குடம்பிகள் அடையாளம் காணப்பட்டன என்று சமூக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு ஒழிப்பு வாரத்தின் முதல் 5 நாட்களில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 31 இடங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவற்றில் 26 ஆயிரத்து 625 இடங்களில் நுளம்பு பெருக்கத்திற்கு உகந்த சூழலை கொண்டிருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நுளம்பு பெருகும் சூழலை பேணிய 73 வளாகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## காயமடைந்த யானை நீர் குழியில் விழுந்தது
### காப்பாற்றுவதற்கு போராட்டம்



கொழும்பு, ஜூலை 07

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் குருநாகல் - நிக்கவரெட்டிய - மானிகம வனப்பகுதியில் சுற்றித்திரிந்த “பஹட்டியா” என்ற யானை ஒன்று நீர் நிரம்பிய குழியில் தவறி விழுந்துள்ளது.

நீர் நிரம்பிய குழியில் விழுந்த யானையை பாதுகாக்கும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர். யானையின் தலை நீரில் மூழ்காமல் இருப்பதற்காக அதன் தலையை சுற்றி மணல் மூடைகள் போடப்பட்டுள்ளன.

யானையை வெயிலிலிருந்து பாதுகாப்பதற்காக யானையை சுற்றி துணியால் கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. நீர்நிரம்பிய குழியில் விழுந்த யானைக்கு உணவும் அளிக்கப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுடன் இராணுவமும் இணைந்து “பஹட்டியா” யானையை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## கைதி ஹரக் கட்டா மருத்துவமனையில்

கொழும்பு, ஜூலை 07

பூஸா அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் உள்ள பாதாள உலகக் குழுவை சேர்ந்த போதைப் பொருள் கடத்தல்காரரான “ஹரக் கட்டா” என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுகயீனம் காரணமாகவே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

விசேட அதிரடிப் படை, பொலிஸாரின் பாதுகாப்பில் அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார் என்று கூறப்பட்டது. (ஐ)

## வீட்டு பராமரிப்பு பணிக்காக 29 பெண்கள் இஸ்ரேல் பயணம்

கொழும்பு, ஜூலை 07

வீட்டு பராமரிப்பாளர்களாக, 29 பெண் பணியாளர்களை கொண்ட குழு இன்று திங்கட்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் இஸ்ரேல் செல்லவுள்ளது.

அவர்களுக்கான, விமான பயணச்சீட்டுகள் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நடைபெற்றது.

இதனிடையே, இந்த ஆண்டில் இதுவரை 379 இலங்கை பராமரிப்பாளர்கள் இஸ்ரேலில் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, பயிற்சி பெற்ற பராமரிப்பாளர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டு, இரு அரசாங்கங்களுக்கும் இடையே இரு தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் இதுவரையில் மொத்தம் 2 ஆயிரத்து 269 இலங்கையர்கள் இஸ்ரேலில் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். (ஐ)

## போதைப்பொருள் கடத்தல் 31,209 வழக்குகள் பதிவாகின

கொழும்பு, ஜூலை 07

நாட்டில் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக மொத்தம் 31 ஆயிரத்து 209 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் ஐஸ் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான வழக்குகளே அதிக எண்ணிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் 10 ஆயிரத்து 912 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், ஹெரோயின் கடத்தல் தொடர்பில் 9 ஆயிரத்து 300 வழக்குகளும் கஞ்சா கடத்தல் தொடர்பாக 9 ஆயிரத்து 476 வழக்குகளும் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கால்வாயிலிருந்து எலும்புக்கூடு மீட்பு

கொழும்பு, ஜூலை 07

கால்வாய் ஒன்றிலிருந்து மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

களுத்துறை - மத்துகம - எடகெஹெல்கல்ல வீதியில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றிலேயே இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

எலும்புக்கூடாக மீட்கப்பட்டவர் இரு மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இறந்தவர் தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்துகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியுடன் உறவு வைத்தால் 10 வருட சிறை!

கொழும்பு, ஜூலை 07

நாட்டில் தற்போதுள்ள சட்டத்துக்கு அமைய 16 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளையுடன் விரும்பியோ, விரும்பாமலோ பாலியல் உறவில் ஈடுபட்டால் அது பாலியல் துஷ்பிரயோகமாகவே கருதப்படும். இதற்காக 10 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளருமான ரங்க திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டில் பிரஜை ஒருவர் சுதந்திரமாகவும் மகிழ்ச்சிகரமாகவும் வாழ்வதற்கு போதுமான அனைத்து சட்டங்களும் உள்ளன. நான் கடந்த 20 வருடங்களாக நீதிபதியாக கடமையாற்றினேன்.

எனது தொழில் துறை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது நாட்டில் உள்ள சட்டங்கள் தொடர்பில் பொதுமக்களிடத்தில் போதுமான அறிவில்லை. உதாரணமாக நாட்டில் தற்போதுள்ள சட்டத்துக்கு அமைய 16 வயதுக்கு கீழ் உள்ள பெண் பிள்ளை விரும்பியோ விரும்பாமலோ பாலியல் உறவில் ஈடுபட்டால் அது பாலியல் துஷ்பிரயோகமே. உதாரணமாக 17 அல்லது 18 வயதுடைய ஆண் பிள்ளை 15 வயதுடைய பெண் பிள்ளையுடன் நெருங்கிப் பழக்கம் கொள்வதாக நினைத்துக் கொள்வோம். இந்த காலப்பகுதியில் இயற்கையாகவே அவர்களில் உடல் ரீதியாக மாற்றங்கள் ஏற்படும். இதனால் அவர்கள் சில சந்தர்ப்பத்தில் பாலியல் உறவில் ஈடுபடலாம்.

ஒருவேளை, இது இருவரின் விருப்பத்தின் பேரிலேயே இடம்பெற்றிருக்கலாம். விருப்பத்தின் அடிப்படையில் பாலியல் உறவில் ஈடுபட்டாலும் அது பாலியல் துஷ்பிரயோகமாகும் என்று எமது நாட்டிலுள்ள சட்டம் சொல்கிறது. இதற்காக 10 வருட கால சிறைத்தண்டனையும் விதிக்கப்படும்.

எனவே, இந்த விடயம் பிள்ளைகளுக்கு பாடசாலை மட்டத்தில் இருந்து தெளிவுபடுத்தப்பட வேண்டும். தண்டனை வழங்குவதற்காக மாத்திரம் இந்த சட்டம் உருவாக்கப்பட்டது அல்ல. 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகள் வயது வந்த ஆண்களால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதை தடுக்கவே இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா அணியின் இனிய பாரதி கைது

திருக்கோவில், ஜூலை 07

**கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யுத்த காலத்தில் கருணா அணியின் அம்பாறை மற்றும் திருக்கோவில் பகுதிக்கு பொறுப்பாக இருந்தவருமான இனிய பாரதி எனும் கே. புஷ்பகுமார் விசாரணை வலயத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார்.**

நேற்று அதிகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் மற்றுமொரு அணியினர் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு இனிய பாரதியை கைது செய்துள்ளனர்.

குறித்த கைது தொடர்பில் அம்பாறை மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தனும் தனது பேஸ்புக் பதிவு ஊடாக உறுதிப்படுத்தி தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த தவலுக்கமைய கோவில் பிரதேசத்தில் உள்ள முனியக்காடு பகுதியில் வைத்து வீட்டுக்குள் மறைந்திருந்த வேளை இனிய பாரதி, புலனாய்வுப் பிரிவினரால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



குறித்த கைதானது இனிய பாரதியின் மீதான தனிப்பட்ட குற்றச்சாட்டுக்கள், இளைஞர் - யுவதிகளை கடத்தி காணாமல் ஆக்கியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளடங்கலாக முன்னாள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் கப்டன் சந்திரநேரு படுகொலை தொடர்பில் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# போக்குவரத்து விதிகளை மீறிய 13 மோ.சைக்கிள்கள் கைப்பற்றல்



காத்தான்குடி, ஜூலை 07

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட போக்குவரத்து சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போக்குவரத்து விதிகளை மீறிய 13 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை, காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம். சுனித வர்ணசூரிய வழிகாட்டலின் கீழ், போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி சி. கே. சாமரநாயக்க தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.


குறித்த மோட்டார் சைக்கிள்கள், தலைக்கவசம் இல்லாமல் வாகனம் செலுத்தல், இலக்கத் தகடுகள் இன்றி பயணித்தல், உரிய ஆவணங்கள் இன்றி பலரைக் கொண்டு பயணித்தல், வேகக்கட்டுப்பாடுகள் இன்றி வாகனம் செலுத்தல் உள்ளிட்ட காரணங்களுக்காக கைப்பற்றப்பட்டுள்ளன.

பொதுமக்களின் உயிர் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, வீதிகளில் ஏற்படக்கூடிய ஆபத்துகளை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தவும் மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடாமல் தங்களது பாதுகாப்பையும் பிறரது பாதுகாப்பையும் கருத்தில் கொள்ளுமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ)

# தமிழரசு கட்சி பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு அஞ்சலி



திருகோணமலை, ஜூலை 07

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் அமரர் இரா. சம்பந்தனின் முதலாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை ஏற்பாடு செய்த இந்த நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தலைமை தாங்கினார். மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவு கூறப்பட்டதுடன் இரா. சம்பந்தன் பற்றிய பேருரையும் இதன் போது நிகழ்த்தப்பட்டது. (எ)

# தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்க

கல்முனை, ஜூலை 07

ஊடகவியலாளர் எல். மப்றூக் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அட்டாளைச்சேனையை சேர்ந்த ஊடகவியலாளர் மப்றூக், கடந்த 02ஆம் திகதி இரவு தனது நண்பர்களுடன் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகில் பேசிக் கொண்டிருந்த போது தாக்குதலுக்குள்ளானார்.

இந்த நிலையிலேயே சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ)

# காஸா மக்களுக்கு ஆதரவாக மட்டக்களப்பில் போராட்டம்!




ஓட்டமாவடி, ஜூலை 07

"உலக கருத்துக்கு தலை வணங்கு" ஏகாதிபத்தியமே இனப்படுகொலைகளை உடனடியாக நிறுத்து என காஸா மக்களுக்கு ஆதரவாக மட்டக்களப்பில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஓட்டமாவடி - மீராவோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு முன்பாக வெள்ளிக்கிழமை தொழுகையின் பின்னர் ஒன்று கூடிய இளைஞர்கள், முஸ்லிம்கள் பலஸ்தீன் - காஸா மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் 25 வயது இளைஞன் கைது

காரைதீவு, ஜூலை 07

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் கடத்திய சந்தேக நபரை காரைதீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெட்டுவாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

காரைதீவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வீதித் தடை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கையை முன்னெடுத்த நடவடிக்கையில் நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் அப்பகுதியால் சந்தேகத்துக்கிடமாக வருகை தந்துள்ளார்.

இதன்போது சோதனை நடவடிக்கையை முன்னெடுத்த பொலிஸார் 15 கிராம் ஹெரோயின், 15 கிராம் ஐஸ் போதைப் பொருட்களை மீட்டனர்.

அத்துடன் குறித்த போதைப்பொருட்களை கடத்தி வந்தவர் 25 வயதுடைய ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் என்பது ஆரம்பக் கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் சட்ட நடவடிக்கைக்காக காரைதீவு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. (எ)

# பொருளாதார தொகைமதிப்பு தெளிவூட்டும் வேலைத்திட்டம்

திருகோணமலை, ஜூலை 07

திருகோணமலை மாவட்டத்தில் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான பொருளாதார தொகை மதிப்பு, விவசாயம் சார் நடவடிக்கை தொடர்பான தெளிவூட்டும் வேலைத்திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட புள்ளிவிவரவியலாளர் ஷரிபுதீன் ஏற்பாட்டில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் தொகைமதிப்பு ஆணையாளர், பிரதி மற்றும் உதவி தொகைமதிப்பு ஆணையாளர்களை தெளிவூட்டும் வேலைத்திட்டமாக இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் பின்னர் உள்ள ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடத்தினுள் வருகின்ற 10 வருட காலத்தினுள் பொருளாதார கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சம்பந்தமாக அறிந்து கொள்ள விவசாய நடவடிக்கை மற்றும் விவசாயமற்ற பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கி தொகைமதிப்பை நடத்த வேண்டியுள்ளது.


அந்த வகையில் பொருளாதார தொகைமதிப்பு 2025 மற்றும் 2026 வருடங்களில் இரண்டு கட்டங்களாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதலாவது 2025 ஆம் ஆண்டில் விவசாய நடவடிக்கைகளின் தகவல்களை திரட்டுதல், இரண்டாவது 2026 ஆம் ஆண்டில் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைத் துறைகளை உள்ளடக்கிய விவசாயம் அல்லாத பொருளாதார நடவடிக்கைகளைக் களத்தில் கணக்கெடுத்தல் போன்றவையாகும்.

இதன்போது விவசாய நடவடிக்கைகளுக்கான விவசாய புள்ளிவிவரங்கள், விவசாய தொகைமதிப்பு முறைகள், தகவல் திரட்டு முறை, நிர்வாகக் கட்டமைப்பு, கள கடமைகளுக்கு உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல், பொறுப்புக்கள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் வெள்ளப்பெருக்கு 14 குழந்தைகள் உட்பட 32 பேர் பலி!

## காணாமல் போனவர்களை தேடும் பணி தீவிரம்



நியூயோர்க், ஜூலை 07

**அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கனமழை, வெள்ளப்பெருக்கால் 14 குழந்தைகள் உட்பட 32 பேர் பலியாகினர். காணாமல் போனவர்களைத் தேடும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.**

அமெரிக்காவின் தெற்கு - மத்திய டெக்சாஸ் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக இடி, மின்னலுடன் கூடிய தொடர் மழை பெய்து வருகிறது. இதனுடன் பலத்த காற்றுடன் கூடிய புயலும் வீசி வருகிறது. இதனால், பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. குவாடலூப் ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு, நகரங்களுக்குள் புகுந்தது. இதில் பலர் சிக்கிக் கொண்டனர்.

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர் மழை மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி பலர் பலியாகினர். இந்த நிலையில், 700இற்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் கோடை கால முகாமுக்கு சென்றுள்ளனர். அவர்களில், 20இற்கும் மேற்பட்ட மாணவிகள் காணாமல் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், அவர்கள் தொலைந்து போய் விட்டார்கள் என அர்த்தமில்லை. அவர்கள் மரங்களில் பாதுகாப்பாக இருக்கலாம். அல்லது தொடர்பு கொள்ள முடியாத இடங்களில் இருக்கக் கூடும் என கூறப்படுகிறது.

இதனையடுத்து ஹெலிகொப்டர்கள், படகுகள் மற்றும் ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி, மரங்களில் சிக்கி நிற்பவர்கள், முகாம்களில் பரிதவித்து நிற்பவர்கள் மற்றும் காணாமல் போனவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதுவரை 32 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 14 பேர் குழந்தைகள் எனத் தெரியவந்துள்ளது. 27 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்கள் அனைவரையும் மீட்கும் வரை எங்கள் பணி ஓயாது என டெக்சாஸ் மாகாணத்தின் நெருக்கடி மேலாண்மை துறையின் தலைவர் நிம் கிட் கூறியுள்ளார். இதுவரை 850 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறும்போது, நானும் மெலனியாவும், இந்த பயங்கர பாதிப்பில் சிக்கிய குடும்பத்தினர் அனைவருக்காகவும் வேண்டிக் கொள்கிறோம் என அவருடைய சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

எனினும், கனமழை மற்றும் வெள்ளம் நீடிக்கும் என தேசிய வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் ஜேசன் ருன்யென் கூறியுள்ளார். 20இற்கும் மேற்பட்ட மீட்பு பணியாளர்கள் மற்றும் அவசரகால பொறுப்புப் படையினர், காணாமல் போனவர்களைத் தேடும்பணியில்தொடர்ந்து ஈடுபட்டு வருகின் றனர். (எ)

# உங்கள் சுதந்திரம் உங்களிடம்
# புதிய கட்சியை தொடங்கி எலான் மஸ்க் அறிவிப்பு



லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 07

உங்கள் சுதந்திரம் உங்களிடமே திருப்பி தரப்படும் என்று புதிய கட்சியை தொடங்கிய உலக பணக்காரரான எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் குடியரசு கட்சி மற்றும் ஜனநாயக கட்சி என இரு கட்சிகள் பெரும் சக்தியாக உள்ளன. இந்த இரு கட்சிகளைச் சேர்ந்தவர்களே வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு, மாறி மாறி வெற்றியும் பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்கா கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை மஸ்க் உருவாக்கியுள்ளார். இதன் வழியே அவர் தன்னுடைய திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்துள்ளார்.

நம்முடைய நாடு வீணாகிக் கொண்டிருக்கிறது என்றும் கொள்ளையடிக்கப்படும் சூழல் காணப்படுகிறது என்றும் எலான் மஸ்க் கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து, உங்களுடைய சுதந்திரம் உங்களுக்கே திருப்பி கொடுக்கப்படுவதற்காக அமெரிக்கா கட்சி தொடங்கப்படுகிறது என நேற்று அவர் அறிவித்துள்ளார். இதனால், ட்ரம்புக்கு போட்டியாக எலான் மஸ்க் தன்னுடைய புதிய கட்சியை எந்த அளவுக்கு பயன்படுத்துவார் என பார்ப்ப தற்காக அந்த நாட்டு மக்கள் ஆவலாக காத்திருக்கின்றனர். (எ)

# 12 நாடுகளுக்கான வரி கடிதத்தில் கையெழுத்து போட்டுவிட்டேன்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்


வாஷிங்டன், ஜூலை 07

வரி விகிதம் தொடர்பில் 12 நாடுகளுக்கான கடிதத்தில் தான் கையெழுத்து இட்டுவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

நேற்று நியூ ஜெர்சி செல்வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசிய டொனால்ட் ட்ரம்ப், "12 நாடுகளுக்கான வரி கடிதங்களில் கையெழுத்து இட்டுவிட்டேன். அந்த நாடுகள் எவை எவை என்பது திங்கட்கிழமை வெளியிடப்படும். இதை எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது விட்டுவிடுங்கள் என்பதே அமெரிக்காவின் அணுகுமுறையாக இருக்கும். ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகளுக்கு வரி விகிதம் அதிகரிக்கப்படும். அது அதிகபட்சம் 70 சதவீதம் வரை இருக்கும். புதிய வரி விகிதம் ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும்"- என்றார்.

# இன்னும் 40 ஆண்டுகள் நான் உயிர் வாழ்வேன்

## 90ஆவது பிறந்த நாளில் தலாய் லாமா நம்பிக்கை



தரம்சாலா, ஜூலை 07

இன்னும் 40 ஆண்டுகளுக்கு உயிர்வாழ்வேன் என்று 90ஆவது பிறந்த நாளில் தலாய் லாமா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

திபெத்தைச் சேர்ந்த பௌத்த மதத் தலைவர் டென்ஜின் கியாஸ்டோ 14ஆவது தலாய் லாமாவாக உள்ளார். இந்தியாவின் இமாச்சல பிரதேச மாநிலம் தரம்சாலா அருகே உள்ள தலாய் லாமா கோவிலில் அவருடைய 90ஆவது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக, தலாய் லாமா நீண்ட காலம் வாழ்வதற்கான பிரார்த்தனை நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்திய மத்திய சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ, அருணாச்சல பிரதேச முதல்வர் பேமா காண்டு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில் தலாய் லாமா கூறுகையில், "பல தீர்க்க தரிசனங்களைப் பார்க்கும்போது, அவலோகிதேஸ்வரரின் ஆசீர்வாதம் எனக்கு இருப்பதாக உணர்கிறேன். இதுவரை மக்களுக்கு என்னால் முடிந்ததை செய்திருக்கிறேன். இன்னும் 30 - 40 ஆண்டுகளுக்கு உயிர் வாழ்வேன் என நம்புகிறேன். இதுவரை உங்கள் பிரார்த்தனைகள் பலனளித்துள்ளன"- என்றார். (எ)

# பழனிச்சாமிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு

சென்னை, ஜூலை 07

தமிழக முன்னாள் முதலமைச்சரும் அ. தி. மு. க. பொதுச்செயலாளரும் தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கி இந்திய மத்திய உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது. முன்னதாக எடப்பாடி பழனிச்சாமிக்கு வை பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அவருக்கான பாதுகாப்பு இசட் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது .

# காஸாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்

காஸா, ஜூலை 07

காஸா முனையில் இஸ்ரேல் இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர். இதேவேளை காஸா முனையில் நிவாரணப் பொருட்கள் வாங்க காத்திருந்த பலஸ்தீனியர்கள் மீது மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிச் சூடு நடத்தியது ஹமாஸ் அமைப்பினரா?, இஸ்ரேல் படையினரா?, நிவாரணப் பொருட்களை திருடிச்செல்லும் கொள்ளைக் கும்பலா? என்பது குறித்த விவரம் இதுவரை வெளிவரவில்லை. (எ)

# இந்தியப் பிரதமர் மோடிக்கு ஆர்ஜென்ரீனாவில் வரவேற்பு



பியூனஸ் அயர்ஸ், ஜூலை 07

இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் ஆர்ஜென்ரீனா சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அங்குள்ள இந்தியர்கள் தேசியக் கொடியுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், அரசு சார்பில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை பிரதமர் மோடி பியூனஸ் அயர்ஸ் சென்றடைந்தார். பிரதமரை வரவேற்க திரண்டிருந்த இந்தியர்கள், இந்திய தேசிய கொடிகளை கைகளில் ஏந்தியும் பாரம்பரிய நடனமாடியும் அவரை வரவேற்றனர். (எ)

# உக்ரைன் மீது ஒரே நாளில் 550 ட்ரோன்களை ஏவி தாக்குதல்

கீவ், ஜூலை 07


உக்ரைன் மீது ஒரே நாளில் 550 ட்ரோன்களை ஏவி ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

போர் தொடங்கியதிலிருந்து இதுவரை இல்லாத அளவில் ரஷ்யா அதிகப்படியான ட்ரோன் மற்றும் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக உக்ரைன் அறிவித்துள்ளது. உக்ரைனின் முக்கிய நகரங்கள் மீது நீண்ட தூர ஏவுகணை வீசி ரஷ்யா தாக்குதல்களை முடுக்கி விட்டிருக்கிறது. முக்கியமாக கீவ் நகரில் இரவு முதல் இடைவிடாமல் தாக்குதல் நடந்தது. வானில் ஏவுகணை, ட்ரோன் குண்டுவெடிப்புகள் ஒளிர்ந்த படி இருந்தன.

இரவு முழுவதும் 550 ட்ரோன்கள் மற்றும் ஏவுக ணைகள் ஏவப் பட்டதாக உக்ரைன் கூறியுள்ளது. இதில் 23 பேர் காயமடைந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விம்பிள்டன் ரென்னிஸ் ஸ்வியாடெக் வெற்றி



லண்டன், ஜூன் 07


விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் 4ஆவது சுற்றுக்கு இகா ஸ்வியாடெக் முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் விளையாடி வருகின்றனர்.

இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் போலந்தின் முன்னணி வீராங்கனையான இகா ஸ்வியாடெக் அமெரிக்காவின் டானியல் காலின்ஸ் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இகா ஸ்வியாடெக் 6-2, 6-3 என்ற நேர் செற் கணக்கில் டானியல் காலின்ஸை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

## சர்வதேச ரேபிட் செஸ்: சம்பியனானார் குகேஷ்




ஜாக்ரெப், ஜூலை 07

சர்வதேச ரேபிட் செஸ் போட்டி தொடரில் இந்திய வீரர் குகேஷ் சம்பியன் பட்டம் வென்றார்.

இந்த ஆண்டுக்கான கிராண்ட் செஸ் சுற்றுப்பயணத்தின் அங்கமான சுப்பர் யுனைடெட் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் சர்வதேச செஸ் போட்டி குரோஷியா தலைநகர் ஜாக்ரெப்பில் நடைபெற்று வருகிறது. 9 சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில் உலக சம்பியன் குகேஷ் (இந்தியா), நோர்வேயின் நம்பர் 1 வீரர் மாக்னஸ் கார்ல்சென் உட்பட 10 வீரர்கள் பங்கேற்றனர்.

இதில் ரேபிட் பிரிவில் 9ஆவது மற்றும் கடைசி சுற்றில் சென்னையை சேர்ந்த 19 வயது குகேஷ், அமெரிக்காவின் வெஸ்லி சோவை சந்தித்தார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் குகேஷ் 36ஆவது காய் நகர்த்தலில் வெற்றி பெற்றார். 9ஆவது சுற்று முடிவில் குகேஷ் 14 புள்ளிகள் பெற்று (6 வெற்றி, 2 சமன், ஒரு தோல்வி) சம்பியன் பட்டத்தை தனதாக்கினார். (எ)

## விம்பிள்டன் ரென்னிஸில் ஜோகோவிச் முன்னேற்றம்

லண்டன், ஜூலை 07

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நோவக் ஜோகோவிச் 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் விளையாடி வருகின்றனர்.

இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், சகநாட்டவரான மியோமிர் கெக்மனோவிக் உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6-3, 6-0, 6-4 என்ற நேர் செற் கணக்கில் மியோமிர் கெக்மனோவிக்கை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி

### சொந்த மண்ணில் சொதப்பிய இலங்கை




கொழும்பு, ஜூலை 07

இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது போட்டி கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 45. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 248 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக பர்வேஸ் ஹொசைன் எமோன் 67 ஓட்டங்கள் அடித்தார்.

இலங்கை தரப்பில் அபாரமாக பந்துவீசிய அஷித பெர்னாண்டோ 4 விக்கெட்களும் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்களும் வீழ்த்தினர். இதனையடுத்து 249 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது.

இதன் காரணமாக இலங்கை அணி 48. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 232 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 16 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்றது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக ஜனித் லியனகே 78 ஓட்டங்கள் அடித்தார். பங்களாதேஷ் தரப்பில் தன்விர் இஸ்லாம் 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி நாளை 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

இந்தியா அபார பந்துவீச்சு

## தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து போராட்டம்

பர்மிங்காம், ஜூலை 07

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 72 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது போட்டி பர்மிங்காமில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 587 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி 407 ஓட்டங்கள் எடுத்தது.இந்த நிலையில், 180 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 64 ஓட்டங்கள் எடுத்து மொத்தம் 244 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந் தது. நேற்று முன்தினம் 4ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது.

இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 83 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 427 ஓட்டங்கள் அடித்திருந்த போது ஆட்டத்தை நிறுத்தியது.

இதனையடுத்து 608 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய கிராலி ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். பென் டக்கெட் 25 ஓட்டங்களிலும் ஜோ ரூட் 6 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இங்கிலாந்து அணி 50 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது.4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 72 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இங்கிலாந்து அணி வெற்றி பெற இன்னும் 536 ஓட்டங் கள் தேவைப்படும் நிலையில், இந்திய அணியின் வெற்றிக்கு இன்னும் 7 விக்கெட்கள் தேவைப்படுவதால் இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது.

## 2 இன்னிங்ஸிலும் சுப்மன் கில் சதம்




பர்மிங்காம், ஜூலை 07

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் சுப்மன் கில் 161 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழந்தார்.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது போட்டி பர்மிங்காமில் நடைபெற்று வருகிறது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் சுப்மன் கில் முதல் இன்னிங்ஸில் 269 ஓட்டங்களும் 2ஆவது இன்னிங்ஸில் 161 ஓட்டங்களும் அடித்துள்ளார். இதன் மூலம் சுப்மன் கில் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 150 ஓட்டங்களுக்கு மேல் அடித்த வீரர் என்ற ஆலன் பார்டரின் மாபெரும் சாதனையை சமன் செய்துள்ளார். இந்த சாதனையை ஆலன் பார்டர் (150 மற்றும் 153 ஓட்டங்கள்) 1980ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக படைத்திருந்தார். அவரின் இந்த 45 ஆண்டு கால சாதனையை சுப்மன் கில் சமன் செய்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓ. எல். ...

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 478,182 பேர் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 398,182 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## சஜித் எமது...

நேர்காணலின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகும் வரை எம்மால் காத்திருக்க முடியாது. அவரது அரசியல் வாழ்வென்பது வேறு. எமது அரசியல் வாழ்வென்பது வேறு. நாங்கள் முற்போக்கு கூட்டணியினர். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அல்லர்.

எமது கட்சி வேறு கட்சியாகும். எமது எதிர்காலத்தை சஜித்துக்கு எழுதி கொடுக்கவில்லை. சஜித் எமது தலைவர் அல்லர். அவர் கூட்டணி தலைவர்- என்றார். (அ)

## வாகரையில்...

இவ்வாறு உயிரிழந்தனர்.

இவர்கள் மூவரும் பணிச்சங்கேணி திருமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களாவர். உயிரழந்த மூவரும் குளத்தின் கரையோரத்தில் குழி தோண்டி விளையாடிக் கொண்டிருந்த போது குளத்தில் காணப்பட்ட பெரிய குழியில் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

தற்போது கோடை காலமானதால் குளத்தில் நீர் மட்டம் குறைந்து காணப்படுவது வழக்கமாகும். இக்காலங்களில் குளத்தில் மீன் பிடித் தொழில் ஈடுபடுபவர்கள் சிலர் தங்களது குடும்ப சகிதம் அப் பகுதிக்கு சென்று தங்கி நின்று இரவு பகலாக மீன் பிடித் தொழில் ஈடுபட்டு வருவது வழக்கமாகும். இவ்வாறான நிலையிலேயே இச் சம்பவம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரழந்தவர்களின் சடலங்கள் உடற்கூற்றாய்விற்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (அ)

## சுண்டிக்குளத்தில்...

காணப்படுகின்றன. அங்கு வசித்த மக்களின் காணிகளுக்கு உறுதி இருக்காது. மக்கள் காலாகாலம் அந்த காணியில் வாழ்ந்து வந்தார்கள்.

ஆனால் அவர்கள் வாழ்ந்த காணியை தற்போது சுவீகரிப்பதற்கு கடற்படை முயற்சிக்கின்றது. அந்தப் பகுதியில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. வீடுகள், கிணறுகள், அங்கே மக்களால் பராமரிக்கப்பட்ட மரங்களும் இருக்கின்றன.

இது தொடர்பாக அப்பகுதி கிராம அலுவலருக்கோ, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருக்கோ தெரியப்படுத்தப்படவில்லை.

ஒரு பிரதேசத்தில் ஒரு காணியை அளவீடு செய்யவேண்டும் என்று சொன்னால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தவேண்டும்.

மீனவர் சங்கம், பிரதேச செயலர், கிராம அலுவலர், காணிக் கிளையினர் ஆகிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாமல் மிக இரகசியமாக இந்த காணிகளை அளவீடு செய்துள்ளார்கள்.

காலப்போக்கில் இந்தப் பகுதியில் கடற்தொழில் செய்கின்ற மக்கள் கடற்றொழில் செய்ய முடியாத நிலைமை உருவாகப் போகின்றது. சுண்டிக்குளம் பகுதியில் கடற்படையின் தளங்கள் விஸ்தரிக்கப்படப்போகின்றன.

மக்களின் காணிகள் மக்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும். இல்லை என்று சொன்னால் மக்களை ஒருங்கிணைத்து இந்த காணிகளை விடுவிப்பதற்கான போராட்டங்களை செய்வோம்-என்றார். (அ)

## அமெ. வரி...

பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெயவர்தனபுர கோட்டையின் ரம்பாட் ஈரநிலப்பூங்காவை சுத்தப்படுத்தும் நடவடிக்கை நேற்று காலை பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தலைமையில் இடம்பெற்றது. இதில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மீது அதிக வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. இது பேச்சுக்கு உட்பட்டது இந்த பிரச்னையை தீர்க்க முடியும். உள்நாட்டில் தயாரிக்கப்படும் மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கு நிவாரணம் அவை. எந்த தொழிற்சாலையும் மூடப்பட அனுமதிக்க மாட்டோம். எதிர்க்கட்சி கூறியது நடக்கவில்லை. கடன் மறுசீரமைப்பை இந்த அரசாங்கத்தால் மேற்கொள்ள முடியாது என கூறினர். ஆனால், இப்போது நான்காம் கட்ட நிதி உதவி எமக்கு கிடைக்கப்போகின்றது. அதே போன்று வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாது என கூறினர். எதிர்க்கட்சி கூறியது நடக்கவில்லை. அமெரிக்காவின் வரிக்கொள்கை தொடர்பில் நாம் எடுத்து நோக்கும் போது அவர்கள் பல நாடுகளுக்கு நிவாரணம் அளிக்கிறார்கள். வியட்நாமியர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே எமக்கும் அந்த வாய்ப்பு நிச்சயம் கிடைக்கப்பெறும். அதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. அமெரிக்கா தனது பொருளாதார திட்டத்தை அரசியல் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்துகிறது. அவர்கள் சில நாடுகளுக்கு நிவாரணம் அளித்துள்ளனர்-என்றார். (அ)

## இனியபாரதி...

வழிநடத்தலில் செயல்பட்டதாகக் கூறப்படும் மற்றுமொருவர் சந்திவெளி பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவருமே தற்போது கொழும்புக்கு மேலதிக விசாரணைக்காக அழைத்து செல்லப்படுகின்றனர்.

2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மனித கொலைகள் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைப் பிரிவினால் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2004ஆம் ஆண்டு விடுதலை புலிகள் இயக்கத்திலிருந்து விலகிய கருணாவுடன் இணைந்து, திருக்கோவில் பகுதியின் ஆயுதக்குழுத் தலைவராக இனிய பாரதி செயற்பட்டு வந்ததுடன், 2007 மற்றும் 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்துக்கான ஜனாதிபதியின் இணைப்பதிகாரியாகவும் செயல்பட்டுள்ளார்.

மேலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாணசபையின் உறுப்பினராகவும் இனிய பாரதி பதவி வகித்துள்ளார். அத்துடன், முன்னாள் பிரதி அமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனின் வழிநடத்தலின் கீழ், கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி பல்வேறு குற்றச்செயல்களில் நேற்று கைது செய்யப்பட்ட இருவரும் ஈடுபட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேநேரம், 2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி அக்கரைப்பற்று நீதிமன்றத்தின் ஆவணக் காப்பகத்தில் ஏற்பட்ட தீப்பரவலுடன், இனிய பாரதி உள்ளிட்ட சந்தேக நபர்களுக்கு நேரடித் தொடர்பு உள்ளதா? என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (அ)

# தகவல் அறியும் ஆணைக்குழுவின் தலைவராகவுள்ளார் நிமல் போபகே!

## பல்வேறு தரப்புகளும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 07

தகவல் அறியும் ஆணைக்குழுவின் தலைவராக ஊடகத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் நிமல் போபகேவை நியமிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

எனினும் தகவல் அறியும் ஆணைக்குழு உருவாக்கப்பட்ட போது அதற்கு எதிராகவும், தகவல் அறியும் உரிமைக்கு எதிராகவும் கருத்துக்களை வெளியிட்ட நிமல் போபகேயை குறித்த பதவிக்கு நியமிக்க வேண்டாம் என்று பல்வேறு தரப்புகளில் இருந்து எதிர்ப்புகள் வெளிக்கிளம்பியுள்ளன.

அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் நிமல் போபகேயுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

நிமல் போபகே குறித்த ஆணைக்குழுவுக்கு தலைவராக நியமிக்கப்பட்டால் அதன் பின் பொதுமக்களின் தகவல் அறியும் மனுக்கள் பதிலளிக்கப்படாமல் கிடப்பில் போடப்படும் நிலை உருவாகும் என்று சமூக ஆர்வலர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (அ)

## வவுனியா...

முன்னணியினர் நேற்று தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களான வவுனியா வடக்கு பிரதேச சபை உப தவிசாளர் சுஞ்சுதன், வவுனியா மாநகர சபை உறுப்பினர் தர்மா, வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் தமிழ்ச் செல்வன் மற்றும் பிரதீபன் உள்ளடங்கிய கட்சி உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் ஆகியோர் குறித்த நிலங்களை சென்று பார்வையிட்ட பின்னர் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா வடக்கில் தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்களின் ஒன்றான வெடிவைத்தகல்லு, திரிவைச்சகுளம் மற்றும் அதற்கு கீழான 600 ஏக்கருக்கும் மேலான வயல் காணிகள் சிங்கள மக்களினால் தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு வகையான காணி ஆவணங்களும் இல்லாமல் குறித்த காணிகள் எல்லையோர சிங்கள மக்களினால் சத்தமில்லாமல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது. குறித்த ஆக்கிரமிப்பு மிக வேகமாக வெடிவைத்தகல்லு சந்தி வரை நகர்ந்து வந்து கொண்டிருக்கின்றது.

குறித்த காணிகள் மகாவலி திட்டத்தின் கீழ் உள்வாங்கும் நோக்கோடு வனவள திணைக்களம் மற்றும் இராணுவத்தினரின் ஆதரவுடன் காடுகள் அழிக்கப்பட்டு குறித்த நிலப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. குறித்த நிலமானது தமிழ் மக்கள் யுத்தத்திற்கு முன்னர் விவசாயம் செய்த நிலங்களாகும். அவ் நிலங்களின் உரிமையாளர்கள் கடந்த 2020 ஆம் ஆண்டு குறித்த காணிகளை துப்பரவு செய்த போது வனவளத் திணைக்களம் அவர்களை கைது செய்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தது.

அதன்பின் நீதிமன்றததால் 2022 ஆம் ஆண்டு குறித்த காணி உரிமையாளர்கள் நிரபராதிகள் என வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னரும் காணிகளை துப்பரவு செய்ய படை தரப்பினரும், வனவளத் திணைக்களமும் அனுமதி வழங்காது தடையை ஏற்படுத்தி வந்திருந்தனர்.

தற்போது குறித்த இடங்கள் உள்ளடங்கலாக 600 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் காடுகள் அழிக்கப்பட்டு பெரும்பான்மை சிங்கள மக்களால் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. கொக்கச்சான்குளம் ஆக்கிரமிக்கப்பட்டு கலாபோகஸ்வேவ ஆக மாறியது போன்று தற்போது திரிவைத்தகுளம் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. ஆட்சி மாறிய போதும் தென்னிலங்கை அரசாங்கத்தின் மனநிலையில் மாற்றம் வரவில்லை.

எனவே இதனை உடனடியாக தடுத்து நிறுத்த அனைத்து தமிழ் மக்களும் ஓரணியில் அணி திரண்டு எதிர்த்து குரல் கொடுக்க வேண்டும் - என்றனர். (அ)

## அரியாலை...

செய்ததன் அடிப்படையில் அகழ்வுப் பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் அந்த இடத்திலும் சான்றும் பொருட்கள் அடையாளம் காணப்பட்டன.

மேலும், அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்ற இடத்துக்கு அருகாமையில் நேற்று ஜே.சி.பி. இயந்திரம் மூலம் வாய்க்கால் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. அப்போது அதிலும் எலும்புகள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவா குழுவின் பங்கேற்போடு இந்த அகழ்வுப் பணிகள் நேற்றும் மேற்கொள்ளப்பட்டன. (அ)

## 27 வருடங்களாக..

என்ற பொருளாதார நிலையையே கொண்டுள்ளது.

1998ஆம் ஆண்டு இலங்கை குறைந்த வருமானம் பெரும் என்ற நாடு என்ற நிலையில் இருந்து இந்த வகைக்கு மேம்படுத்தப்பட்டது. மேலும், 1987 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கு இடையில் முழு தெற்காசிய பிராந்தியமும் குறைந்த - நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இணைந்தது. இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட வருமான நிலைகளும் இந்த ஆண்டு சற்று குறைக்கப்பட்டுள்ளன என்று புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (அ)

## அமெரிக்காவுடன்...

அமெரிக்க ஏற்றுமதிகளுக்கு அதிக வரிகளை விதிக்கும் நாடுகளுக்கு, கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், பரஸ்பர வரியை விதிக்க, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கம் தீர்மானித்தது.

அதன்படி, இலங்கைக்கு 44 வீதம் வரை வரியை விதிக்க அமெரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததுடன், இலங்கை உள்ளிட்ட 60 நாடுகளுக்கு, 90 நாட்களுக்கு அந்த வரி விதிப்பு இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில், இலங்கை உட்பட பல நாடுகள் அமெரிக்காவுடன் வர்த்தக ஒத்துழைப்பு மற்றும் வரி குறைப்பு பேச்சுகளை ஆரம்பித்தன.

எவ்வாறாயினும், குறித்த 90 நாட்கள் கால அவகாசம் எதிர்வரும் 9ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இதனிடையே, அமெரிக்காவுக்கு ஒவ்வொரு நாடுகளிலும் இருந்து மேற்கொள்ளப்படும், இறக்குமதிகளுக்கான தீர்வை வரி அளவுகளை குறிப்பிட்டு அந்தந்த நாடுகளுக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளதாக, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 12 நாடுகளுக்கு இவ்வாறான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவை இன்று வெளிவரும் எனவும் தெரிவித்த அவர், எந்தெந்த நாடுகளுக்கு அவை அனுப்பப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், அமெரிக்காவுடன் இடம்பெற்ற வரி இணக்க பேச்சு சாதகமான மட்டத்தை எட்டியுள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மாகாண சபை தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது

## மாகாண சபைகள் அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 07

**மாகாண சபைகள் தேர்தலை நடத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகள் தேர்தல் விவகாரத்தில் சட்ட ரீதியான ஒரு சில தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, இதற்கமைய அமைச்சு மட்டத்தில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்று மாகாண சபைகள் , உள்ளூராட்சி மன்றங்கள், பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்குரிய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் அமைச்சுசார் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா முன்வைத்த திருத்த யோசனை மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் முன்வைத்த தனிநபர் பிரேரணை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்துவோம் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளோம். மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. மாகாண சபைகள் முறைமையில் காணப்படும் ஒருசில சிக்கல்கள் மற்றும் குறைபாடுகளுக்கு தீர்வு காண வேண்டும். குறுகிய அரசியல் நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு செயல்பட்டால் அது நிர்வாக கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே, மாகாண சபைகள் முறைமை குறித்து சகல தரப்பினருடனும் வெளிப்படைத்தன்மையுடன் பேச்சில் ஈடுபடுவோம் - என்றும் கூறினார். (ஐ)

## யாழ் - கொழும்பு சொகுசு ரயில் தினசரி சேவை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 07

கொழும்பு -காங்கேசன்துறை சொகுசு ரயில் சேவை இன்று திங்கட்கிழமை முதல் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது என்று புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சொகுசு ரயில் கொழும்பிலிருந்து தினமும் காலை 5.45 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. மேலும், காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 02 மணிக்கு மீண்டும் கொழும்பு நோக்கி பயணிக்கவுள்ளது.

இந்த சொகுசு ரயில் சேவை முன்னர் வார இறுதிநாட்களில் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டது.

புதிய சொகுசு ரயில் சேவை ஆரம்பமான பின்னர், யாழ்தேவி ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து தினமும் காலை 06.40 மணிக்கு புறப்படும் என புகையிரதத் திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## விசேட நடவடிக்கையில் 457 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜூலை 07

தென் மாகாணத்தின் காலி, மாத்தறை, எல்பிட்டி பொலிஸ் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் 457 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.00 மணி முதல் 11.00 மணி வரை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே பல்வேறு குற்றங்கள் தொடர்பாக இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரயில் மோதி ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 07

பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் மோட்டார் சைக்கிளை ரயில் மோதியதி ஒருவர் உயிரிழந்தார்.

கொச்சிக்கடையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலே மோட்டார் சைக்கிளை மோதியது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயங்களுடன் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக் குறித்து கொச்சிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## வாகனம், 2 வீடுகள் பயன்பாடு சபாநாயகர்மீது முறைப்பாடு!

கொழும்பு, 07

வாகன பயன்பாடு, 2 வீடு கள் பயன்பாடு தொடர்பில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன வுக்கு எதிராக புதிய மக்கள் முன்னணி இலஞ்சம், ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்கு மூவில் முறைப்பாடளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் புதிய மக்கள் முன்னணியின் தலைவர் சுகீஷ்வர பண்டார நடத்திய செய்தியாளர் சந்திப்பில், சபாநாயகர் அவரின் உத்தி யோகபூர்வமான வாசஸ்தல மான மும்தாஜ் மஹாலை பயன் படுத்தாமல் லொரிஸ் தொடர் மாடி குடியிருப்பில் வசிக்கிறார்.

இந்த தொடர்மாடி குடி யிருப்பில் தற்போது அவரது தனிப்பட்ட செயலாளர் வசிக்கிறார்.


சபாநாய கருக்கு எவ் வாறு அரச செலவில் இரண்டு வசிப்பிடங் களை வழங்க முடியும். பாராளுமன்ற செயலாளர் நாய கத்தின் அனுமதியுடன் சபாநாயகருக்கு இரண்டு வாக னங்களும் 900 லீற்றர் எரிபொருளும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், சபாநாயகர் 3 வாகனங்களை பயன்படுத்து கிறார். சபாநாயகருக்கு எவ் வாறு இரண்டு இல்லங் களை யும் அனுமதியற்ற வகையில் வாகனத்தையும் வழங்க முடியும்.

ஆகவே, இதற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு வில் முறைப்பாடளித்துள்ளோம் - என்றார். (ஐ)

## சகல மாகாணங்களிலும் புனர்வாழ்வு நிலையம்!

### இந்த ஆண்டுக்குள் நிறுவப்படும் என்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்!



கொழும்பு ஜூலை 07

போதைப்பொருளுக்கு அடிமையான 4 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் நாட்டிலுள்ளனர். ஆனால், 4 புனர்வாழ்வு மத்திய நிலையங்களே உள்ளன. எனவே, இந்த வருட இறுதிக்குள் மாகாணத்துக்கு ஒரு புனர்வாழ்வு நிலையத்தையேனும் நிறுவுவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஹெரோயின், ஐஸ் போதைப்பொருள் 5 தொன்களை கடந்த 5 மாதங்களில் எம்மால் கைப்பற்ற முடிந்துள்ளது. முந்தைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் இது நூறு சதவீத முன்னேற்றமாகும். நாட்டுக்கு கொண்டு வரப்படும் போதைப்பொருட்களை கைப்பற்றும் வகையில் பொலிஸ் திணைக்களம் சார்பில் சாதகமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தற்போது, நாட்டுக்குள் போதைப்பொருளை கட்டுப்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இதனை நாம் வெளிப்படுத்தாவிட்டாலும் நாளாந்தம் அது நடைபெறுகிறது. இந்த போதைப்பொருட்கள் பயன்பாட்டுக்காகவும் விற்பனை நோக்கத்துக்காகவும் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. அதிகளவிலான கடத்தல்கள் இந்த நாடுகளில் இடம்பெறுகின்றன.

போதைப் பொருட்களுக்கு அடிமையான4 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் நாட்டில் வாழ்கிறார்கள் என நாம் நம்புகிறோம்.

தற்போது 4 மத்திய நிலையங் கள் உள்ளன. இங்கு சுமார் 140 பேருக்கு மாத்திரமே புனர்வாழ்வு வழங்கும் வசதிகள் காணப்படுகின்றன.

எனவே, இந்த வருட இறுதிக்குள் குறைந்தபட்சம் மாகாணத்தில் ஒரு புனர்வாழ்வு மத்திய நிலையத்தை நிறுவ நாம் திட்டமிட்டுள்ளோம்.

அனைத்து மாவட் டங்களிலும் புனர்வாழ்வு மத்திய நிலையங்களை அமைப்பதே எமது திட்டமாகும். இதற்காக 95 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## தேசிய விபத்து தடுப்பு வாரம் இன்று முதல் ஆரம்பமாகிறது!

கொழும்பு, ஜூலை 07

தேசிய விபத்து தடுப்பு வாரம் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இன்றைய தினம் வீதி விபத்து தடுப்பு நாளாகவும் நாளை 8ஆம் திகதி பணியிட விபத்து தடுப்பு நாளாகவும் மறுநாள் 9 ஆம் திகதி வீடு, முதியோர் இல்ல விபத்து தடுப்பு நாளாகவும் 10 ஆம் திகதி நீரில் மூழ்கும் விபத்துகள் தடுப்பு, 11ஆம் திகதி பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் பகல்நேர பராமரிப்புமைய விபத்து தடுப்பு நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் காலகட்டத்தில், விபத்து தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ள பல்வேறு இடங்களை ஆய்வு செய்தல், எதிர்காலத்தில் விபத்து அபாயத்தைக் குறைக்க குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம், நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் 7 பேரில் ஒருவர் மருத்துவ சிகிச்சை தேவைப்படும் விபத்தில் சிக்குகின்றனர். அதாவது, ஒவ்வொரு நிமிடமும் குறைந் தது 6 - 8 பேர் விபத்தால் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## நோயாளர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் விரைவில்!

கொழும்பு, ஜூலை 07

அரச மருத்துவமனைகளில் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு தரமான சத்தான உணவை வழங்குவதற்காக விசேட திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான முன்னோடி திட்டம் மஹரகம அபேக்ஷா மருத்துவமனையை மையமாகக் கொண்டு ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது, கருத்து தெரிவித்த அமைச்சர்,

“நோயாளர்களுக்கு, சத்தான உணவை வழங்க வேண்டிய அவசியத்துடன் மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் இருந்து ஆரம்பிக்கப்படும் இந்த முன்னோடித் திட்டம்,எதிர்காலத்தில் நாட்டின் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் செயல்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்

அரச மருத்துவமனைகளில் உள்ள நோயாளர்களுக்கு உணவு, பானங்களை வழங்குவதற்காக சுகாதார அமைச்சு ஆண்டுதோறும் பெருந்தொகையைச் செலவிடுகிறது என்றாலும், அந்தப் பணம் நியாயமாக செலவிடப்படுகிறதா என்பது குறித்து கவலைகள் உள்ளன ” - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org